தேதி:16.08.2021 அசல்வழக்கு எண். 221-2017 வ.சா.1 ( வாசு )

**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை:-**

3ம்பிரதிவாதி வங்கியின் நிபந்தனைகளை ஒப்புக் கொண்டு தான் கணக்கு ஆரம்பித்தோம் என்றால் சரிதான். அந்த கணக்கை 11.11.2014 ம் தேதி முடித்துவிட்டோம் என்றால் சரிதான். அவ்வாறு கொடுத்த கடிதத்தின்நகல்தான் என்னிடம் காண்பிக்கப்படுவதாகும். மேற்படி கடிதத்தில் வங்கி மீது எந்தவிதமான குற்றச்சாட்டும் கூறவில்லை என்றால் சரிதான். டெபாசிட்டை திருப்பி கேட்டுள்ளோம். 3ம் பிரதிவாதி நாங்கள் கணக்கை முடித்தவுடன் எங்களின் கணக்கை முறைப்படி முடித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 3ம் பிரதிவாதிவங்கி மீது குற்றச்சாட்டு கூறி கடிதம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் அவ்வாறு கடிதம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி வங்கி நாங்கள் ஒப்புக்கொண்ட நிபந்தனைகளை மீறி எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு எதிராக பிராது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு எதிராக எனக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.